உ
சிவமயம்



வில்வளை - மாதகலை

பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்.வயித்திலிங்கம் செல்லத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

10.11.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மாதகலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்

# வயித்திலிங்கம் செல்லத்துரை

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த*

# - நினைவு மலர் -

**10. 11. 2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்கள் இதயத் தெய்வத்திற்கு*

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் தலைவராகத்

திகழ்ந்து எல்லோருடனும் அன்பாகவும்,

பண்பாகவும் பழகி எமது

நல்வாழ்வுக்காகத் தனது உடல்,

பொருள், ஆவி அனைத்தையும்

அர்ப்பணித்து இறைவனின் பாதங்களை

சென்றடைந்த எமது அன்புத்

தெய்வத்திற்கு இம்மலரினைச்

சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*இங்ஙனம்*

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உகலம் படைத்து உகந்தான் மனத்துள் இருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்அடியோங்களுக்கே.

## திருவாசகம்

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின் கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நண் அரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே

## திருவிசைப்பா

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம் மாறா வெள்ஆனை மேல் கொள்ள
முளையாமதி சூடி மூஆயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடு அரங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற்றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவு றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத்தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பயணம்

இலங்கையின் வடபால் யாழ்ப்பாணக் குடாநாடு அமைந்துள்ளது. இதன் வடமேற்கில் மாதகல் கிராமம் அமைந்துள்ளது. இதன் கண் பண்டைய சிறப்புடன் விளங்கிய சம்பில் துறைமுகம் விளங்கியது. இப்பகுதியை நாகதீபத்தில் ஆண்ட முடியரசனின் தம்பி விளங்குதேவன் ஆண்டதாகவும் நாகர் வம்ச பரம்பரையினர் வாழ்ந்ததாகவும் வழி வழிக் கதைகள் நிலவுகின்றன. இச்சம்பில் துறைமுகத்தில் இளவாலைப் பகுதியில் ஆரம்பித்த சம்புநாதமாறு கடலில் கலந்ததாகவும்இன்று மாரீசன்கூடல், சூளானை, பண்டத்தரிப்பு மேலதீக நீரை கடலில் கலக்கும் ஆறாகவும் விளங்குகிறது.

நால்வகை நிலங்களைக் கொண்ட மாதகல் வளம்கொழிக்கும் பூமியாகும். மாரிகாலத்தில் வயல்களில் நீர் தேங்கி நெற்கதிர்களை சுமந்து நிற்கும் காட்சி பார்ப்பவர்களின் மனதை நெகிழச் செய்யும் இது பரவசமானது. மாதகலோடு தொட்டு நிற்கும் பாக்கு நீரினை அள்ளி வழங்கும் செல்வம் அளப்பரியது. விவசாயமும், மீன்பிடியையும் வாழ்வாதாரமாகவும் கொண்ட குடும்பங்கள் தமது வாழ்க்கைச் சக்கரத்தை சந்ததி சந்ததியாக ஓட்டிச் செல்கின்றனர்.

இச்சிறப்புக்களை கொண்ட மாதகல் கிராமத்தில் வேளாண் மரபில் தோன்றியவர் ஆறுமுகம். இவரது குடும்ப வாழ்வு சிறக்க அம்பலவாணர் அவதரித்தார். இவரது வாழ்வில் சிதம்பரத்துடன் பெரியோர்களால் இணைத்து வைக்கப்பட்டது. இவர்கள் வம்சத்தை விளங்க வைக்க குஞ்சரம், வயித்திலிங்கம், தெய்வானை எனும் மூவர் தோன்றினர். தந்தையார் தன் மகன் வயித்திலிங்கம் சிறப்புடன் வாழ மாதகலைச் சேர்ந்த கந்தர் மகள் தெய்வானையை கைப்பிடித்து வைத்தனர். உழவுத் தொழிலில் சிறந்து தெய்வபக்தியில் முழுமனதோடு ஈடுபட்டு குடும்பம் குதூகலமாகவும் சந்ததி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளைக்கவும் செல்லத்துரை, மல்லிகாதேவி, பாலசிங்கம், இராசரத்தினம், பரமேஸ்வரி, கமலாதேவி ஆகியோர் பிறந்தனர். அமரர் செல்லத்துரை தன் ஆரம்பக் கல்வியை யா / மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கற்று தேர்ந்து இடைநிலைக் கல்வியை யா / மாதகல் சென் யோசவ் கல்லூரியில் கற்று க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தினார். வீட்டு சூழல் மாற வேண்டும் என்று நம்பிக்கை கொண்ட பலர் அரச உத்தியோகங்களை நாடும் காலமாகையால் இவர் தம் தந்தையாரும் இவருக்கு அரச உத்தியோகம் தேடினார். அதன் பயனாக சலுசலா நிறுவனத்தில் சேர்ந்து கொண்டார்.

இளமை காலத்தில் இனத்தின் மேல் பற்றுக்கொண்டு தமிழர் விடுதலை பெறவேண்டும், தம்மைத்தாமே ஆளும் இனமாக தமிழர் விளங்க வேண்டும் என்ற இலட்சியப் பற்றோடு தந்தை செல்வநாயகம் வழியில் ஈர்க்கப்பட்டு தமிழரசுக் கட்சியில் ஈடுபாட்டுடன் செயற்பட்டார். தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் மற்றும் சகல போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

இவருக்கு வாலிபப் பருவம் வந்ததும் தந்தையார் தக்க இடம் தேடினார். இதன்போது மாதகலைச் சேர்ந்த இவர்தம் கிட்டிய உறவான சங்கரப்பிள்ளை நல்லையா தன் பத்தினி இராசம்மாவுடன் திருகோணமலையில் பல வருடங்களாக வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு பூவின்பராணி, சிறீஸ்கந்தராசா, சங்கரப்பிள்ளை (சக்திவேல்), பவளதேவி, சந்திரகுமாரி, பரமேஸ்வரி, ஆகியோர் பிறந்தனர். பெற்றோர்கள் கூடிப்பேசி நிச்சயித்தபடி செல்லத்துரை பூவின்பராணி திருமணம் திருகோணமலையில் சிறப்புடன் நடந்தேறியது. திருமண வாழ்க்கையுடன் இவருடைய வாழ்விடம் திருகோணமலைக்கு மாறியது. திருகோணமலை தமிழரசுக் கட்சிக் கிளையுடன் தொடர்புபட்டு அதற்காக அயராது பாடுபட்டார். அக்காலத்தில் திரு.இராஜவரோதயம், திரு.சம்பந்தன் போன்றோரின் ஆலோசனைபெற்று கட்சிக்காக செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் பொல்லாத காலம் இவரை கொழும்புக்கு அழைத்தது. இவர் புகையிரதம் மூலம் கொழும்பு சென்றபோது இரு புகையிரதங்கள் மோதிக் கொண்டன. இதனால் இவருக்கு பெருத்த காயம் ஏற்பட்டு கால்மூட்டு விலகியது. இதற்கு குருநாகலை வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதன் பின் இவர் தன் வாழ்நாள் முழுவதும் ஊன்றுகோலுடன் வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். இதன்பின் தனது சலுசலா உத்தியோகத்தையும் துறக்க வேண்டியதாயிற்று. இவருடைய வாழ்க்கையின் பின் பகுதியில் இவர் மனைவி இவருக்கு உறுதுணையாக வாழ்ந்தார். இவரின் சித்தாண்டி வாழ்க்கை அங்கு தானியங்களை அரைக்கும் இயந்திரங்களை அமைத்து சிறிய தொழிலாக அதனை மேற்கொண்டார். அரசியலில் இன மோதல்கள் வளர்ந்தபோது இவரின் அரிசி ஆலையும் பாதிக்கப்பட அதனை விட்டு வேறு தொழில் முயற்சிக்கு மாறினார். திருகோணமலை நகரில் ஒரு வியாபார நிறுவனத்தை ஆரம்பித்தார். சிறிய முதலுடன் ஆரம்பித்த இவரது வியாபாரம் குடும்பத்தை கொண்டு நடாத்த உதவியது. திருகோணமலையில் அடிக்கடி நிகழும் கலவரங்கள் இவரின் வியாபாரத்தை பாதித்தன. வியாபாரமும் குன்ற பெருமுதலாளிகளுடன் போட்டி போட முடியாமல் வியாபார நிறுவனமும் மூடப்பட்டது. பிற்காலத்தில் குடும்பத்தை நோயும் பற்றிக் கொண்டது. மனைவியின் சுகவீனம் காரணமாக மனைவி தன் உறவுகளோடு வாழ்ந்த காலம் இவர் மாதகல் தன் உறவுகளோடு வாழ்ந்தார். 2013இல் இவர் தம் மனைவி இறக்க இவரும் மாதகலில் வாழ்ந்து வந்தார். இவர் தானும் மனைவியின் இறப்போடு சேர்ந்து விடுவேன் என்று அடிக்கடி கூறிவந்தார். அந்த வகையில் மனைவியின் 1ம் வருடத் திதியாகிய ஆண்டுத் திதி வருவதற்கு முன் 10.10.2014இல் இறைவனடி சேர்ந்தார்.

**இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பற்ற என் தந்தை ......

அகிலத்தில் நான் சிறக்க
அறிவுரை பல தந்து
துகிலும் களைந்து – எனை நாளும்
தூண் போல் தாங்கி

பகலும் இரவும் அயராது
பணிகள் பல புரிந்து
புகழும் விரும்பா என்
புனிதமான பெருந்தகையே....!

காலமெலாம் நான்
கவிதைகள் சுரப்பினும்
ஓலமே வாழ்வென
ஒப்பாரி செய்யினும்

தூல லிங்கம் போல்
துலங்கும் உன் வதனத்தை
காணவே சிறந்த உன்
சரித்திரப் பயணத்தை

கண்ணின் எதிரே காண
ஓர் வாய்ப்பில்லை
எண்ணியே தினம் தினம்
எக்காளமிடுகிறான் உன் புதல்வன் ....!

இப்படிக்கு
**அன்பு புதல்வன்**
**சே.நிசாந்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதர சகோதரியார் புலம்பல் ...

எங்களது குல முதல்வர் மூத்த அண்ணா
இன்றும்மைக் காணாது துடிக்கின்றோம் நாம்
பொங்கிவரும் ஆசையுடன் கதைகள் சொல்வீர்
புத்திமதி கூறியெமை நடத்திக் கொள்வீர்

அண்ணனை இழந்து கதறித் துடிக்கின்றோம்
எங்களின் கூக்குரல் கேட்கலையோ?
உங்களைப் போன்று ஒரு சகோதரத்தை
உடன் பிறப்பாய்ப் பெற – நாம்
முற்பயன் செய்த தவப்பயனன்றோ
இறைவா அருள் தந்திடு மீண்டும் மலராய்
நாம் இம்மண்ணில் பிறந்து மணம் வீச

## மருமக்கள் புலம்பல் ......

நித்தம் நித்தம் மாமா என நாலைந்து
மகிழ்வுடன் நாம் வாழ்ந்து வந்தோம்
மாமா மாமா என நாம் அழைப்பதை விட
மருமகள் பிள்ளை என நீங்கள் அழைக்கும்
ஓசைகள் எப்பொழுதும் நம் வீட்டில்
ஒலித்த வண்ணம் இருந்தனவே
இன்று அவ்வோசையெல்லாம்
ஊமையாகிப் போயினவோ?
அன்பு முகம் காணாமல் அலறுகின்றோம்
உங்கள் நினைவோடு
என்றும் இங்கு நாம் வாழ்வோம்
உங்களது ஆத்மா சாந்தியடைய
அமைதி கொள்க

**மதியழகன், தர்ஷினி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமான என் கடவுள் தாய்மாமாவே

தங்கமனம் கொண்ட தன்னிகரில்லா

அன்பு மாமாவே

எங்கே நாம் சென்று இனியுங்களைக் காண்பது

மாண்புமிகு சுத்தமான மனம் படைத்தவரே

வெந்து நாம் அழுகின்றோம்

துடைக்க வரமாட்டீரோ

பெற்ற தந்தையைப் போலெம்மைப்

பேணிக் காத்தீர்கள்

எம் நினைவெல்லாம் நீங்காது

நிறைந்திருப்பது நீங்களன்றோ

ஓராயிரம் மாதங்கள் சென்றாலும்

உங்கள் நினைவுகள் என்

நெஞ்சை விட்டு அகலாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய

நுணசைக் கந்தனை வேண்டுகின்றேன்.

உங்கள் பிரிவை தாங்க முடியாது தவிக்கும்

**மருமகள் - கலைச்செல்வி,**

**மகன் - சேயோன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் பாசமான பிதாவே...

பயிருக்கு நீர் போல் எனை
பல வழியில் பேணி
உயிருக்கு உயிராய் எனை
உத்தமனாய் வளர்த்து

எந்தன் சித்தியே சிறப்பென – உன்
சிரசு மேல் ஏற்று
உந்தன் வாழ்வில் உல்லாசம்
துறந்தாய் உழைத்தாய் - எமக்காக

நூல்கள் பல வடித்து – நல்கிய
பெருநுட்பம் பொருந்திய – கோலை
கால்களை ஊன்றி நீ நடக்கையில்
அவையும் ஒரு கவி சொல்லுமன்றோ

தேடியும் கிடைக்காத என்
திவ்வியம் பொருந்திய தந்தையே
பாடிப் பாடி உன் புகழை
என் பாவங்கள் களைவேன் - நான்

சே.டினோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவலையைப் போக்க வழிகூறு

இயந்திர வாழ்வில்
நிரந்தர தூக்கம் நீ கொண்டாய்
இயலாமல் தவிக்கின்றோம்
உம் பிரிவால் நாம் இங்கே

அருகில் நீ இல்லாத போதும்
அலைபேசி துணைகொண்டு
அறிவுரைகள் பல தந்து – எம்
அறியாமை நீக்கிடுவாய்

நவநாகரீக மாற்றம் தான்
நம்மிடையே வந்தாலும்
நம்முடைய கலாச்சாரம் தனை
கலைக்க எமை அனுமதிக்க மாட்டாய்

வஞ்சகன் காலனவன் - நய
வஞ்சகமாய் திட்டம் தீட்டி
காய்ச்சல் எனும் கபட நாடகமாடி – உனை
கள்ளத்தனமாய் பறித்துக் கொண்டான்

கதறுகின்றோம் நாம் இங்கே
உனை தினம் தினம் காணாமல்
கடுகளவேனும் கருணை இருந்தால் - எம்
கவலையைப் போக்க வழிகூறு

தர்ஷி, சஜி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லதொரு மனிதன் நீ...

திடமான கொள்கையுடன்
தெளிவான பாதையிலே
நடமாடி ஓய்ந்துவிட்ட
நல்லதொரு மனிதன் நீ

செல்வாவின் பாதையிலே
செந்தமிழர் மண்ணுக்கு
நல்வாழ்வு கிடைத்திடவே
நாளெல்லாம் உழைத்தவன் நீ

நல்லோர்கள் பின்சென்று
நல் மனிதனாய் வாழ்ந்து
அல்லோர்கள் செய்கைகளை
அன்பாலே சிதைத்தவன் நீ

கனிவான பார்வையிலும்
களங்கமில்லா நட்பினிலும்
பணிவான வார்த்தையிலும்
பங்குவமாய்த் தேர்ந்தவன் நீ

வெள்ளுடையில் நீ வந்தால்
வெண் மேகம் தலைகவிழும்
கள்ளமிலா உன் சிரிப்பால்
கவிவரியும் பின்னகரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி என எமையழைக்கும்
தமிழை இனிக் கேட்பதெப்போ?
அன்பாலே கட்டிவைக்கும்
அருள் விழியைப் பார்ப்பதெப்போ?

மாதகல் மண்ணுடனே
மாமலையும் துடித்திடவே
வேதனையை எமக்களித்து
விண்ணுலகம் சென்றனையோ?

எங்கு நீ சென்றாலும்
எம்மனத்தே வீற்றிருப்பாய்
பொங்கிவரும் தமிழெனவே
பொலிவுடனே நிலைத்திருப்பாய்.

**கந்தவனம் கோணேஸ்வரன்**
**திருக்கோணமலை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் காண்பேனோ?

பள்ளி செல்லும் பருவமது
பக்குவப் படாத வயது அது
துள்ளித் திரிந்த வேளையது
துயரம் சேராக் காலமது
உள்ளம் திறந்த நட்பொன்று
உறவாய்க் கிடைத்தது எனக்கன்று
கள்ளம் இல்லா நட்பதனைக்
கடைசி வரைக்கும் காத்தோம் நாம்!

சொந்த அண்ணன் போலிருந்து
சொல்லித் தந்தாய் எண்கணிதம்
அந்த நாளை மறவாதுன்
அன்பு தன்னை நினைக்கின்றேன்!
எந்தப் பயனும் கருதாது
என்னிடம் காட்டிய பாசத்தை
இந்த நாளில் நான்மீட்டு
இதயம் நொந்து கவல்கின்றேன்!!

வீட்டை விட்டு எங்கேனும்
விரும்பிச் செல்ல நேர்ந்துவிட்டால்
கூட்டிச் சென்று காட்டிடுவாய்
கூடப் பிறவா அண்ணல்போல்
காட்டித் தந்த இடங்களையும்
கற்றுத் தந்த பாடத்தையும்
மீட்டுப் பார்த்து நெகிழ்கின்றேன்
மீண்டும் எப்போ துனைக்காண்பேன்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பழுக் கேதும் இல்லாத
அன்பை நினைத்து வாடுகிறேன்!
ஒப்புர வொழுகிப் பிறர்மனதை
உருக்கிய பண்பைத் தேடுகிறேன்!!
எப்பொழுதும் தமிழ் உரிமைக்காய்
ஏங்கித் தவித்ததை எண்ணுகின்றேன்!!!
இப்படி உறவை இப்புவியில்
எப்போ மீண்டும் காண்பேனோ??

**சபா அருள்சுப்பிரமணியம்**

**உணர்வதில்லை**

மலர்ந்த மலர்கள்
மடியும் என்று
மலரும் மலர்கள்
நினைப்பதில்லை.
சேர்ந்த உறவுகள்
பிரியும் என்று
சேரும் உறவுகள்
உணர்வதில்லை.
இருமை என்பது
உலகின் இயற்கை
அதில் பிரிவு என்பது
வாழ்வின் நியதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை சேனாதிராசா,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணம்.
01.11.2014

## அண்ணர் செல்லத்துரைக்கு எம் இதய அஞ்சலி

அண்ணர் செல்லத்துரை எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து விட்டார் எனும் செய்தி பெரும் துயரத்தைத் தந்துவிட்டது. அவர் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமைக்கு மிகவும் வருந்துகிறேன்.

யாழ்ப்பாணம், மாதகல் தனித்துவமான ஒரு ஊர். அவ்வாறே வேளாண்மை வளம், கடல்வளம், கல்விச் செல்வம் நிறைந்த நிலம். அதே போல தமிழும், சைவமும், கிறிஸ்தவமும் ஒற்றுமையுடன் தழைத்தோங்கிய நிலம்.

அதற்கும் மேலாக தந்தை செல்வநாயம், தளபதி அமிர்தலிங்கம் தலைமை தாங்கிய தமிழ்மக்கள் நிலத்தில் தமிழரசுக் கொள்கைப்பற்றும், தம் நிலத்தில் தம்மை ஆளும் தன்னாட்சி இலட்சியப் பற்றும், விடுதலை உணர்வும், நிறைந்த தமிழூர் மாதகல்.

அந்த மாதகல் மண்ணில், அந்தப் பாரம்பரியத்தில் தான் செல்லத்துரை அண்ணரும் உதித்தார், வளர்ந்தார். தமிழர் தலைநகரெனும் புகழ் திருமலையில் வாழ்க்கையைத் தொடர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும், பண்பும், தமிழரசுக் கொள்கைப் பிடிப்பும், தமிழராட்சி இலட்சியப் பற்றும் நிறைந்த தமிழ் மகனாய் விளங்கித் தன்னலமற்ற தன் அர்ப்பணிப்பால் மக்கள் தொண்டராய் மிளிர்ந்து தன் வாழ்வின் இறுதிவரை ஓர் இலட்சிய மானிடனாய் வாழ்ந்து காட்டியவர் செல்லத்துரை அண்ணர்.

அவர் மாண்புடன் மறைந்தாலும் மக்கள் இதயத்தில் அவர் மாண்பு என்றும் நிலைத்து வாழும் என நம்புகின்றேன்.

**மாவை சேனாதிராசா**,
பாராளுமன்ற உறுப்பினர்,
தலைவர்
இலங்கைத் தமிழரசுக் கட்சி.

**பண்புச் செயல்கள்**

1) *தகுந்தவர்களுக்குத் தானம் செய்.*
2) *ஒழுக்க போதனைகளைப் பின்பற்று.*
3) *நல்லெண்ணங்களைப் பின்பற்று.*
4) *பிறருக்குப் பணி செய், பிறரைக் கவனித்துக்கொள்.*
5) *பெற்றோரையும், மூத்தோரையும் மதித்துநட அவர்களுக்கு வேண்டுவன செய்.*
6) *உன் புண்ணியங்களாய் ஒரு பகுதியை பிறருக்குக் கொடு.*
7) *பிறர் உனக்குக் கொடுக்கும் புண்ணியங்களை ஏற்றுக்கொள்.*
8) *நல்ல கருத்துக்களை கேட்டு உயர்.*
9) *நல்லெண்ணங்களை நினை.*
10) *நல்ல கருத்துக்களைப் பிறருக்குக் கற்றுக்கொடு.*
*உன் குற்றங்களை நீக்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். வை. செல்லத்துரை

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்,**
*சிரேஷ்ட துணைத்தலைவர்,*
*இலங்கை தமிழரசுக் கட்சி.*

*1949இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றமையானது இலங்கை அரசியலில் ஒரு திருப்பு முனையாகும். தமிழ் மக்களை ஒரு தனித் தேசிய இனமாக அடையாளம் கண்ட தந்தை செல்வாவும், அவரோடு இணைந்து செயலாற்றிய தளபதிகளும் இத்தேசிய இனத்திற்கு வரலாற்று ரீதியான ஒரு மரபு வழித் தாயகம் உண்டென்றும். இதன் வழி இத் தேசிய இனம் சுயநிர்ணய உரிமைக்கு அருகதை உள்ள இனமாகும் என்ற சித்தாந்தத்தை முன்னிறுத்தி பிரசாரம் செய்தனர். தேசியம், தாயகம், சுய நிர்ணயம் ஆகிய கோட்பாடுகளை உள்ளடக்கும் அரசியல் தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான கட்டமைப்பே இனத்தின் அடையாளத்தைத் தக்க வைக்கும் எனவும் ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்றியது மட்டுமன்றி இவ்விலக்கினைப் பல்வேறு படிகள் மூலம் அடைவதற்கு மாறி மாறி வந்த அரசுகளுடன் ஒப்பந்தமும் செய்தனர்.*

*இவர்களது தியாகமும், மக்கள் பல்வேறு சவால்களின் மத்தியிலும் இவர்களுக்குப் பின்னால் நின்று அளித்த பங்களிப்பும், போராளிகளான இளைஞர்கள் செய்த அளப்பரிய தியாகமும், 2002இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சு வார்த்தை மேடையில் உள்ளகச் சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டியை நோக்கிய பயணத்திற்கு வழிவகுத்தது. இதனால் இன்று தமிழர் பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட்டு விட்டது.*

*தமிழர் அரசியலை சலுகை அரசியலில் இருந்து உரிமை அரசியலாக மாற்றிய பெருமை தந்தைக்கும், தளபதிகளுக்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இதனை முன்னெடுத்துச் செல்ல தக்க தொண்டர்களை இனங்கண்டு பல்வேறுவகைப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். இத்தகைய தொண்டர்களில் அமரர்.செல்லத்துரை அவர்களும் மிக மிக முக்கியமானவர். கட்சியின் சிந்தனைகளை, தலைவர்களின் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்று அவர்களை அரசியல் மயமாக்கும் பணியில் சிறப்பாக ஈடுபட்டவர். தந்தையும், தளபதிகளும் போன்று உரிமைப் போர் என்ற வேள்வித் தீக்கு தம்மை ஆகுதி ஆக்கியவர். பல்வேறு இடர்பாடுகள் மத்தியிலும் யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் கட்சிப் பணிகளை மிக அர்ப்பணிப்புடன் மேற்கொண்டவர்.

இவர் நல்லவர், நாணயமானவர், பொதுத் தொண்டையே தமது பணியாக மேற்கொண்டு வாழ்ந்தவர். இதனால் இவர் சார்ந்த கிராமம் தமிழ்ச் சமூகம் பல்வேறு நன்மைகளை பெற்றன. தியாகம் என்றால் இதன் அர்த்தம் இதுதான் என்று வாழ்ந்தவர். தியாகம் என்பது எதுவித பலனையோ அன்றிப் பதவியையோ எதிர்பார்க்காது கட்சிக்காகப் பணி செய்வதே இஃதாகும். இதனால் கட்சிக்காக மிக மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இவர் பதவிகளை நாடிச் செல்லவில்லை. இன்று அரசியலில் தியாகம் என்பது பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப் படுகிறது. இத்தியாகம் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ள விரும்புவோர் கட்டாயம் அமரர்.செல்லத்துரை பற்றி அறிதல் வேண்டும். உண்மையான தொண்டன் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு வரைவிலக்கணம் வகுத்துச் சென்ற இப்பெருந்தகை நம்மால் என்றும் நினைவு கூரத்தக்கவர்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அப்பரம் பொருளை பிரார்த்திக்கிறோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் நினைவில் இருந்து ...

இனம், மொழி, பிறந்த ஊர் என்ற சிந்தனைகளுடன் உலாவிய ஒரு மனிதராகவே அமரர். செல்லத்துரை அவர்கள் எமது ஞாபகத்தில் பதிந்திருக்கிறார். அவர் மறைந்து ஒரு மாதகாலம் கடந்து விட்டாலும் அவரது பேச்சு நேற்றைய தினம் கேட்டது போல காதுகளில் ஒலிக்கிறது. அவரை சிரமப்படுத்திய நோய்களுக்கு நடுவிலும் அவற்றைப் பற்றி பேசுவதை விட அரசியல் கவலைகளும், இனத்தின் இன்றைய நிலையும் பற்றிய அங்கலாய்ப்புகளும்தான் அவரது உரையாடல்களில் அதிகமாகக் கேட்கக் கூடியதாக இருந்ததை நினைத்து பார்க்கிறோம். இறுதியில் நோய் அவரை காவு கொண்டாலும் கூட இன்னும் சிறிது காலம் அவர் உயிர் வாழ்ந்திருக்க கூடாதா என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அமரர். செல்லத்துரை யாருக்கும் தொந்தரவாகவோ, சுமையாகவோ இருக்க விரும்பாதவர். சொந்த வாழ்க்கையில் பல சோதனைகளை சந்தித்தவர். ஒரு புகையிரத விபத்தில் உயிர் பிழைத்தவர். ஆனால் அவரது காலை அது நிரந்தர பாதிப்புக்கு உள்ளாக்கி விட்டது. இருந்தபோதும் மனம் தளர்ந்து போனவரல்ல. தான் கொண்ட அரசியல் கொள்கையோடும், பொதுநல நோக்கோடும் இறுதிவரை இணைந்து நின்ற அவரது போக்கு இன்றைய பல அரசியல் தலைவர்களின் நட்பையும், அபிமானத்தையும் தேடிக் கொடுத்திருந்தது. அவரது இறுதி கிரியைகளில் பல தலைவர்களும் பங்கு கொண்டு தமது துயரை வெளிப்படுத்தியிருந்தனர்.

அவர் மறைந்தாலும் அவரது பேச்சும், புன்முறுவல் மாறாத முகமும் எல்லோருடைய மனங்களையும் விட்டு அகலாது நிலைத்திருக்கும். எங்கிருந்தபோதும் அவரது ஆத்மாவின் பார்வையும் இங்கேயே பதிந்திருக்கும்.

**டாக்டர். செ.சண்முகதாஸ்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பண்பாளர்

"நேற்றிருப்பார் இன்றில்லை" என்ற முதுமொழிக்கு ஏற்ப வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தனக்கு கிடைத்த மனிதப் பிறவியை ஏனையவர்களுக்கான வழிகாட்டியாக தடங்கள் பதித்துச் சென்று விட்டார். உள்ளதை உள்ளபடியே கூறி ஏனையோரிடமும் தனது கருத்தை மேலோங்கச் செய்வதில் வல்லவர் செல்லத்துரை அண்ணன் எனக் கூறினால் மிகையில்லை.

தனது வாழ்நாளில் பெரும் பகுதியை வடபுலத்திற்கு வெளியே கழித்த இவர் அதிலும் கணிசமான கால் பகுதியில் திருமலை மண்ணில் செயற்பட்டு, தமிழ் பேசும் மக்களின் நலனுக்காய் தீவிரமாக உழைத்தவர்களின் பட்டியலில் முன்னிலை வகிப்பவர். இவரது கருத்துக்களின் உண்மைத்தன்மையையும், சுயநலமற்ற சேவை மனப்பாங்கினையும் கண்டு இவரை மதித்தவர்கள் அநேகர். பல்வேறு தொழில்சார் செயற்பாடுகளை செயற்படுத்தி அனுபவம் கண்டவர். தன்னைச் சூழ உள்ளவர்களின் நலன்களில் அக்கறை செலுத்தி தானாகவே சென்று ஆலோசனைகள் கூறி உதவிடும் பண்புகள் உடையவர் என இவரைப் பற்றிய அனுபவங்களை கூறிக்கொண்டே செல்லலாம்.

இறுதிக் காலத்தில் மாதகல் கிராமத்தில் வதிந்து கழித்த வேளையில் தனது அன்பு மனைவியை இழந்து மனமுடைந்திருந்தார். இந்நாட்களில் கூட அரசியல் தலைமைகளுடன் ஆரோக்கியமான உறவுகளைப் பேணி எமது கிராமத்தின் நலனுக்காய் உழைத்துக் கொண்டிருந்தார். வெளிநாட்டு புலம்பெயர் சமூகத்தினருடன் சீரிய செயற்பாடுகளுக்கு வழி சமைத்து எமது கிராமத்து மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டுக்காய் பல அரிய செயற்பாடுகளுக்கு வித்திட்டு எம்மை மகிழ்வித்துக் கொண்டிருந்தார். இவரது சேவைக்கு அணிகலனாக மாதகல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகள் சனசமூக நிலையத்தின் உருவாக்கத்தைக் கூறலாம். இதனை உருவாக்கியது மட்டுமன்றி இந்நிலையத்தின் பல்வேறு மேம்பாட்டு திட்டங்களை செயற்படுத்தி சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதில் முழுமையாக உழைத்துக் கொண்டிருந்தார்.

இத்தகைய ஒரு சமூக பண்பாளர் இவ்வளவு விரைவில் எம்மைவிட்டு பிரிந்து செல்வார் என எவரும் நினைத்துப் பாராத ஒன்று. இவரது சேவை என்றென்றும் நிலைத்திருக்கும். செல்லத்துரை அண்ணன் அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லோரும் பிரார்த்திப்போம்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படுவர்"**

**திருசுப்பிரமணியம் கிருஷ்ணகுமார்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி கல்வி வலயம்,
சாவகச்சேரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்கைப் பற்றாளன்

அமரர். செல்லத்துரை அவர்களுடன் இளம் வயதிலிருந்து அமரத்துவம் அடையும் காலம்வரை நெருக்கமாகப் பழகியவர்களுள் நானும் ஒருவன்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றார் திருவள்ளுவர். இதன் பொருள் விளக்கம் நாங்கள் நினைப்பவை யாவும் உயர்வான சிந்தனையாக இருத்தல் வேண்டும். அமரர் அவர்கள் தமிழ் மக்கள் அரசியல் சமத்துவம், பொருளாதார வள சிறப்பு, கலாச்சார பண்பாடுகளுடன் வாழவேண்டுமென்ற உன்னதமான இலட்சியப் பற்றுடன் சுதந்திர இனமாக வாழ வேண்டும் என்பதற்காக அரசியலில் பணியாற்றிய தொண்டராக விளங்கினார்.

அரசியல் பணி மாத்திரமன்றி எங்கள் கிராமத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏனையவர்களுடன் இணைந்து பங்களிப்புச் செய்தவர். அரசியலும், சமூக நலனும் ஒன்றிற்கொன்று இணைகரங்கள் என்பதை செயலுருவில் வெளிக்காட்டியவர்.

அவரது சொந்த வாழ்வில் மனத்தாக்கங்கள் ஏற்படுத்தும் நிகழ்வுகள் ஏற்பட்டபோதும் மனம் தளராது தமிழ் இனப்பற்று அமரரின் சிந்தனையில் மேலோங்கியதன் காரணமாக சஞ்சலமற்ற மன உறுதியுடன் அரசியல் இலட்சியக் கருத்துக்களை பண்பான சொற்பிரயோகம், இனிமையான வார்த்தைகள் மூலம் பயனுள்ளதென ஏனையோர் ஏற்கும் விதத்தில் பிரசாரம் செய்யும் ஆற்றல் வாய்ந்தவராக விளங்கினார்.

செல்லத்துரை அவர்கள் அமரத்துவம் அடைந்தாலும் அவர் விதைத்த அரசியல் கருத்துக்கள் எங்கள் கிராமத்தவரிடையே நிலைபெற்று செயலாற்றிக் கொண்டே இருக்கும்.

**கா.அழகரத்தினம்**
சமாதான நீதவான்,
ஓய்வுநிலை அதிபர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சைவிட்டகலா சமூக சேவையாளன்

அமரர். வயித்திலிங்கம் செல்லத்துரை அவர்கள் வில்வளை, மாதகல் பகுதியில் பிறந்து தொழில் நிமித்தமும், திருமணத்தின் பின்னும் திருகோணமலையில் வசித்தாலும் தனது பகுதிக்கும், அந்த மக்களுக்கும் என்னென்ன வழிகளில் உதவலாம் என்ற நினைவுடன் தான் எந்நேரமும் வாழ்ந்து வந்தார்.

எமது கிராமம் 1992ம் ஆண்டு இராணுவ நடவடிக்கை யினால் இடம்பெயர்ந்தது. பின்னர் 1998ம் ஆண்டு திரும்ப எமது கிராமத்திற்கு வந்தபோது எமது கலைமகள் சனசமூக நிலையம் முற்றாக அழிக்கப்பட்டது. அதற்குரிய ஆவணங்களும் இல்லை. அந்தவேளையில் அமரர். திருகோணமலையில் வசித்தார். இங்குள்ள எங்களிடம் சனசமூக நிலையம் தொடர்பாக எந்த பதிவும் இல்லை என அமரர் பிரதேச செயலகத்திடம் கேட்டு இதற்கான நடவடிக்கை எடுக்கும்படி கோரினார். அவரின் அறிவுரையின்படி எங்களை தற்காலிகமாக ஒரு இடத்தில் பத்திரிகை போடும்படி கூறினார்கள். அதற்காக க.வீரவாகு அவர்களிடம் கதைத்து 2 வருடம் அவருடைய வீட்டில் பத்திரிகை போட்டு சனசமூக நிலையத்தை இயக்கி பதிவுகள் மேற்கொண்டோம். பின் தற்காலிக கொட்டகை அமைத்து அதில் 5 வருடம் நடாத்தினோம். இதனை எல்லாம் பார்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும், வெளிநாட்டில் வசிக்கும் எமது பகுதி மக்களிடமும், கிராம மக்களிடமும் நிதி சேகரித்து காணி வாங்கி எமது கிராமத்தில் வேறு பகுதிகளில் இல்லாத ஒரு பெரிய சனசமூக நிலயக் கட்டடம் அமைத்தார். இதனால் ஊர் மக்களிடமும் இன்சொல்கள் கேட்டார். எமது கிராம சிறுவர்களை கல்வியில் உயரச் செய்ய வேண்டும் என்ற அவாவினால் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்களை ஒழுங்குசெய்து இன்றுவரை அந்த வகுப்புக்கள் நடைபெறுவதற்கு ஆவன செய்தார். தான் ஆதரித்து வந்த அரியரட்டி வைரவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடம் கட்ட வேண்டும் என ஆர்வம் காட்டினார். ஆனால் அவரால் அந்த வேலையை ஒப்பேற்ற முடியவில்லை.

அவருடைய இழப்பு எமது கிராமத்திற்கும், மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!**

**நிர்வாகம்,**
**கலைமகள் சனசமூக நிலையம்.**
வில்வளை, மாதகல்.

**மனித உறவுகள் மேம்பாடடைய**

மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்.
பிறரின் நலன்களில் அக்கறை காட்டுங்கள்
பிறர் சொல்வதை கூர்ந்து கவனியுங்கள்.
பிறரது குறைகளைப் பேசாதீர்கள்.
தாராளமாகப் பாராட்டுங்கள்.
சிரித்த முகத்துடன் இருங்கள்.
நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்திமதி சொல்லும் உத்தமரே...

எமது வம்சத்தில்
வந்துதித்த மூத்தவரே
தந்தையை நாம் இழந்து
தவித்து நிற்க
எம்மை பார்க்க
நான் உண்டென்று உரைத்தீரே

கல்வியில் தடுமாறி
இடைநடுவில் நான் நிற்க
முன்னேற வழி உண்டு என
தெம்பு தந்தீரே
தன்சொல் நான் கேட்டு
கல்வியில் முன்னேற வழிவகுத்தீரே


எனக்கோ தொழில் கிடைக்க
என்னை அழைத்த மாமாவே!
உத்தியோகத்தில் நடப்பது எப்படி
என அறிவுரை கூறினீரே
படுக்கையிலே தானிருக்க
கிராம வளர்ச்சியினை நினைத்தீரே

தூர இடமிருந்து நான் வர
தான் சொன்ன வார்த்தை இதுவே
தொழில் செய்யும் இடமிதில்
நேர்மையாய் இருப்பா
கஸ்ரப்பட்டு வருபவருக்கு
உதவி செய்திடப்பா
கை நீட்டி லஞ்சம்
வேண்டிராதேயப்பா
தான் சொன்ன இவ் வார்த்தை
இனி எப்போ என் காதுகுளிர கேட்பேனோ

**அ.சு.மோகனதாஸ்**
**மருமகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்பத்தின் மூத்த தலைவரை
இழந்து நின்றவேளை
எமது துயரில் பங்குகொண்டு
நேரடியாகவும், தொலைபேசி மூலமும்
ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கு
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வில்வளை,**
**மாதகல்.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்.
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ.
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ.
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ.
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.



**இதுவே உலக நியதியும்,**
**எனது படைப்பின் சாராம்சமுமாகும்.**
**-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org